**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 213/2021**
**connected with**
**அசல் வழக்கு எண் 198/2019**

PW3 – கந்தசாமி த/பெ ராஜாங்கம்
நாள்–24.01.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். யார் என்னை சாட்சியம் சொல்ல அழைத்து வந்தார் என்றால் 2-ம் வாதி சித்ராதேவி ஆகும். தாவா சொத்தில் தற்சமயம் சவுக்கு பயிரிடப்பட்டு 3 மாதம் ஆகியுள்ளது என்றால் நான் பார்க்கவில்லை. தாவா சொத்தின் புல எண் எனக்கு தெரியாது. தாவா சொத்து எந்த வருடம் யாரால் வாங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றாலும் தெரியாது. வாதிகளின் தகப்பனார் கல்யாணசுந்தரம் ஆகும். அவர்களது குடும்பத்தில் ஏற்பட்ட பத்திரத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். தாவா சொத்து கல்யாணசுந்தரத்திற்கு எவ்வாறு கிடைத்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கல்யாணசுந்தரத்திற்கு எவ்வளவு நஞ்சை எவ்வளவு புஞ்சை நிலங்கள் இருந்தது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு தெரிந்து கல்யாணசுந்தரம் சொத்து எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

கல்யாணசுந்தரம் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எவ்வாறு நிர்வாகம் செய்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விவசாயம் செய்து வந்தார். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சம்மந்தங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் 2-ம் வாதி சொன்னதின் பேரில் நான் கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்குபற்றி எனக்கு எந்த விவரம் தெரியாது என்றும் வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை.